# நமது கிருஷ்ணர்

தொகுப்பு

M. கலீல் அஹ்மது

வெளியிடுவோர்

தமிழக புத்தக வெளியீட்டுக் குழு
அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்
11, முதல் பிரதான சாலை, யு.ஐ. காலனி,
கோடம்பாக்கம், சென்னை- 600 024.

# NAMATHU KRISHNAR

(TAMIL)

First Edition : March 2003
Second Edition : July 2009

Published by :

ISHA'ATH COMMITTEE TAMIL NADU
AHMADIYYA MUSILM JAMA'ATH
No. 11, First Main Road,
United India Colony, Kodambakkam,
Chennai - 600 024. Tamil Nadu.
Phone : 2481 7174

# பதிப்புரை

மதங்களின் அடிப்படை போதனைகளான இறை தியானம், மக்கள் தொண்டு ஆகியவை மக்களுக்கு அமைதியையும் நிம்மதியையும் தருகின்றன.

''இவர்களே நம்பிக்கையாளர்கள். இவர்களின் உள்ளமே அல்லாஹ்வின் நினைவால் அமைதியடைகின்றது.கவனமாகக் கேளுங்கள். அல்லாஹ்வின் நினைவிலேயே உள்ளங்கள் அமைதியடைகின்றன''(13:29)என்கிறது திருக்குர்ஆன். இறைவனை நினைவு கூர்வதும் இறைவனின் படைப்புகளுக்குத் தொண்டாற்றுவதுமே மதங்கள் போதிப்பவையாகும்.

ஆனால் இன்று மதத்தின் பெயரால் மக்களின் மன அமைதி பறிக்கப்பட்டுள்ளது. எல்லா மதங்களும் ஒரே இறைவனை சுட்டிக்காட்டுகின்றன என்ற எண்ணம் மறக்கடிக்கப்பட்டு என் மதம், உன் மதம் என்ற நச்சுக் கருத்து விதைக்கப்படுகிறது.

மார்க்கம் கூறும் அமைதி வழியை போதிக்க வேண்டிய முல்லாக்கள் வீண் சண்டைகளுக்கு தூபம் போடுகின்றனர். அஹிம்சையைப் போதிக்க வேண்டிய சாதுக்களோ ஆயுதமேந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகின்றனர். மதங்களின் உண்மையான போதனைகளை சரிவர உணராத சாதாரண மக்கள் இவர்களைப் பின்பற்றுகின்றனர். இதனால் கலவரங்கள் வெடிக்கின்றன. அப்பாவி மக்கள் அவற்றுக்கு பலியாகின்றனர்.

இந்த இழிநிலை மாற மதங்களின் அடிப்படை தத்துவம் ஒன்றே என்ற உண்மையை சமான்னியர்களுக்கு உணர்த்த வேண்டும். இது பற்றி அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தை நிறுவிய ஹஸ்ரத் அஹ்மது அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கீழ்வருமாறு கூறியுள்ளார்கள்:

''இது மிகவும் அன்பானதும், அமைதி வழங்கக் கூடியதும், சமாதானத்தின் அடிப்படையை நாட்டக் கூடியதும், நல்லொழுக்க நிலைகளுக்கு உதவக் கூடியதுமான ஒரு கொள்கையாகும். அதாவது, உலகில் தோன்றிய எல்லாத் தூதர்களையும், அவர் இந்தியாவிலோ, பாரசீகத்திலோ, சீனாவிலோ வேறு ஏதாவது நாட்டிலோ தோன்றியவராக இருப்பினும் அத்தூதர்கள் எல்லாரையும் நாம் உண்மையாளர்கள் என ஏற்றுக் கொள்ள வேண்டும். இவர்களுக்காக இறைவன் கோடிக்கணக்கானோரின் உள்ளங்களில் இவர்களிடத்து மதிப்பையும் மரியாதையும் உருவாக்கியுள்ளதோடு இவர்களின் உண்மைச் சமயத்தை நிலை நிறுத்தியுமுள்ளான்." (ரூஹானி கஸாயின் தொகுதி 12 பக்கம் 259 துஹ்பா கைசரியா)

'நமது கிருஷ்ணர்' என்ற இந்தச் சிறிய நூல் இந்த உயரிய நோக்கத்திற்காகவே வெளியிடப்படுகிறது. இந்நூலில் ஸ்ரீ கிருஷ்ணர் ஓர் இறைதூதர் என்பது திருக்குர்ஆன், நபிமொழி மற்றும் பகவத்கீதை ஆகியவற்றின் அடிப்படையில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, ஸ்ரீ கிருஷ்ணரின் போதனைகளுக்கும் இஸ்லாத்தின் போதனைகளுக்கும் உள்ள ஒற்றுமைகளை இந்நூல் விளக்குகிறது. இதன் மூலம், அடிப்படைக் கோட்பாடுகளில் மதங்கள் ஒன்றுபட்டிருக்கின்றன என்ற உண்மை எடுத்துக் காட்டப்படுகிறது.

இந்நூல் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் பிரசார ஏடான 'சமாதான வழி' மாத இதழில் ஸ்ரீ கிருஷ்ணர் பற்றி வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்பாகும். இந்நூல் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் கிளை அமைப்பான 'லஜ்னா இமாயில்லாஹ்' என்ற மாதர் அணியின் சார்பாக 2003 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. அதன் இரண்டாம் பதிப்பு தற்போது வெளியிடப்படுகிறது. இதிலுள்ள கருத்துகள் மக்களைச் சென்றடைந்து அதனால் நற்பலன் விளைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

- **வெளியீட்டாளர்**

10.04.2009

# நமது கிருஷ்ணர்

'நமது கிருஷ்ணர்'என்ற இந்த நூலின் தலைப்பைப் பார்த்து, ஸ்ரீ கிருஷ்ணரை உரிமை கொண்டாடும் இவர்கள் யார் என்ற வினா உங்களின் உள்ளத்தில் நிச்சயம் எழும். அஹ்மதி முஸ்லிம்கள் ஸ்ரீ கிருஷ்ணரை ஓர் இறை தூதர் அதாவது ஒரு 'நபி' என்று நம்புகின்றனர். இது மத நல்லிணக்கம் கருதியோ மக்களை திருப்திப் படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடனோ உருவாக்கப்பட்ட நம்பிக்கை அல்ல. மாறாக இறைதூதர் என உணரப்பட்ட ஒருவரை இறைதூதராக ஏற்பது கடமை என எண்ணியே ஸ்ரீ கிருஷ்ணரை அஹ்மதி முஸ்லிம்கள் 'நபி' என ஏற்கின்றனர். ஒரு முஸ்லிம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை மட்டும் 'நபி' யாக ஏற்றால் போதாது. உலகில் தோன்றிய அத்தனை 'நபி' மார்களையும் அவர் ஏற்றாக

வேண்டும். ஒரு ‘நபி’யை ஏற்று இன்னொரு நபியை ஏற்காதிருப்பது இறைவனின் பார்வையில் குற்றமாகும்.

## திருக்குர்ஆனும் இறைதூதர்களும்

وَلَقَدْ بَعَثْنَا فِي كُلِّ أُمَّةٍ رَّسُولًا أَنِ اعْبُدُوا اللَّهَ وَاجْتَنِبُوا الطَّاغُوتَ

‘நீங்கள் அல்லாஹ்வை வணங்குங்கள்; தீயவர்களை விட்டு விலகுங்கள் என்ற கட்டளையுடன் ஒவ்வொரு சமுதாயத்திற்கும் நிச்சயமாக நாம் தூதரை அனுப்பினோம்.’ (16:37)

وَإِن مِّنْ أُمَّةٍ إِلَّا خَلَا فِيهَا نَذِيرٌ

‘எச்சரிக்கை செய்பவர் எவரும் வராத எந்தச் சமுதாயமும் இல்லை.’ (35:25)

وَلِكُلِّ قَوْمٍ هَادٍ

‘ஒவ்வொரு சமுதாயத்தினருக்கும் (இறைவனிடமிருந்து அனுப்பப்பட்ட) வழிகாட்டி ஒருவர் உண்டு.’ (13:8)

திருக்குர்ஆனின் மேற்கண்ட வசனங்களிலிருந்து உலகெங்கும் பல்வேறு சமுதாயங்களிடையே இறைதூதர்கள் தோன்றியுள்ளனர் என்பது தெளிவாகிறது. இந்தியா பல சமுதாயங்களைக் கொண்ட நாடு. எனவே இந்தியாவில் ஒரு நபி அல்ல, பல நபிமார்கள் தோன்றியிருக்க வேண்டும்.

திருக்குர்ஆனில் சில நபிமார்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இப்படி பெயர் குறிப்பிடப்பட்ட நபிமார்களை மட்டும் ஏற்க வேண்டும்; மற்றவர்களை ஏற்கவேண்டிய அவசியமில்லை என்று கருத இடமில்லை. ஏனெனில்,





وَلَقَدْ أَرْسَلْنَا رُسُلًا مِّن قَبْلِكَ مِنْهُم مَّن قَصَصْنَا عَلَيْكَ وَمِنْهُم مَّن لَّمْ نَقْصُصْ عَلَيْكَ

‘நிச்சயமாக நாம் உமக்கு (நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு) முன்னர் பல தூதர்களை அனுப்பி உள்ளோம். அவர்களுள் சிலரைப்பற்றி நாம் உமக்குக் கூறியுள்ளோம். நாம் உமக்குக் கூறாதவர்களும் அவர்களுள் சிலர் உள்ளனர்.’ (40:79)

இதிலிருந்து திருக்குர்ஆனில் பெயர் குறிப்பிடப்படாத இறைதூதர்களும் உண்டு என்பது உறுதியாகிறது. மேலும் 1,24,000 நபிமார்கள் தோன்றியுள்ளனர் என ஒரு நபிமொழியில் காணப்படுகிறது. எனவே, திருக்குர்ஆனில் குறிப்பிடப்படாத பல நபிமார்கள் உலகின் பல்வேறு பகுதிகளிலும் தோன்றியிருக்க வேண்டும். இவர்களை ஏற்பது ஒரு முஸ்லிமின் கடமையாகும்.

## ஸ்ரீ கிருஷ்ணர் ஓர் இறைதூதர்

நபிமொழி ஒன்றில் இவ்வாறு காணப்படுகிறது:

كَانَ فِي الْهِنْدِ نَبِيٌّ أَسْوَدُ اللَّوْنِ اِسْمُهُ كَاهِنًا

**கான ஃபில் ஹிந்தி நபிய்யுன் அஸ்வதுல் லவ்னி இஸ்முஹூ காஹினா**

‘இந்தியாவில் ஒரு நபி தோன்றினார். அவர் கருமை நிறத்தவர். அவர் பெயர் காஹினா.’

இந்த நபிமொழி ஹஸ்ரத் தைலமி அவர்களின் ‘ஃபிர்தவ்ஸுல் அக்பார்’ என்ற நூலில் காணப்படுகிறது. ஹஸ்ரத் தைலமி ஹிஜ்ரி ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு ‘முஹத்திஸ்’ அதாவது நபிமொழிகளை கற்றுத் தேறியவராவார். இந்த நபிமொழியில் குறிப்பிடப்பட்டுள்ள ‘காஹினா’ என்பவர்

'கனய்யா', 'கண்ணன்' என்றெல்லாம் அழைக்கப்படும் ஸ்ரீ கிருஷ்ணரேயாகும்.

## இஸ்லாமிய சான்றோர்களின் கருத்து

ஹிஜ்ரி ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஹஸ்ரத் தைலமி மேற்கண்ட நபிமொழியை தமது நூலில் இடம் பெறச் செய்திருக்கிறாரென்றால் அது அக்காலத்தில் மக்களால் பேசப்பட்ட, உறுதி செய்யப்பட்ட ஒரு நபிமொழியாகவே இருந்திருக்க வேண்டும்.

அடுத்து 'அத்தன்ஸீல்' என்ற திருக்குர்ஆன் விளக்கவுரை நூலில் 40:79 ஆம் வசனத்தின் விரிவுரையில் இவ்வாறு காணப்படுகிறது:

'கருமை நிறமுடைய இறைதூதர் ஒருவரை அல்லாஹ் அனுப்பியுள்ளான். அவர் திருக்குர்ஆனிலே கூறப்படாதவர்களுள் ஒருவராவர் என ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அறிவித்துள்ளார்கள்.' (தொகுதி 17, பக்கம்: 65)

அல்லாமா ஸம்ஹஷரியின் விரிவுரையான 'கஷ்ஷாஃப்' என்ற நூலிலும் இதே கருத்தைக் காணலாம்.

புகழ்பெற்ற இறைநேசர் ஹஸ்ரத் காஜா ஹஸன் நிஸாமி அவர்கள் தமது 'கிருஷ்ண பீத்தீ' என்னும் நூலில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்கள்:

'இந்தியாவில் தோன்றியுள்ள அவதாரங்கள், சீர்திருத்தவாதிகள் ஆகியோர்களுள் கிருஷ்ணர் தமது பல்வேறு நற்பண்புகளின் காரணமாக தனிச் சிறப்புடையவராகக் காணப்படுகிறார்.' (பக்கம் 39)

அவ்வாறே புகழ்பெற்ற மேதை செய்யது அக்தர் மோஹானி தமது கட்டுரையொன்றில்,

'என் கருத்துப்படி அவர் (ஸ்ரீ கிருஷ்ணர்) தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அவதாரமாவார். அவர் மக்களின்





வழிகாட்டலுக்காக இறைவனால் அனுப்பப்பட்டவராவார். அவரை மதிப்பதும் கண்ணியப்படுத்துவதும் நமது கடமையாகும்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

இன்னும் கவிஞர் முஹம்மது இக்பால் உள்ளிட்ட புகழ்பெற்ற பலர் ஸ்ரீ கிருஷ்ணரை தலைசிறந்த ஒருவராக ஏற்றுக் கூறியுள்ளனர்.

இவற்றிலிருந்து ஸ்ரீ கிருஷ்ணர் ஓர் இறைதூதர் என்பது அஹ்மதி முஸ்லிம்களின் தனிப்பட்ட கருத்தல்ல; அது பல்வேறு சான்றோர்களின் கருத்துமாகும் என்பது புலனாகும்.

## இதயங்களில் வாழ்கின்றவர் இறைதூதர்

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைத் தோற்றுவித்த ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலைஹிஸ்ஸலாம்) (1835-1908) அவர்கள் தமது 'தொஹ்ஃபயே கைஸரியா' என்னும் நூலில், கோடிக்கணக்கான மக்களின் உள்ளங்களில் நீண்ட நெடுங்காலமாக நிலைத்திருப்பது சாமான்யர்களுக்கு சாத்தியமானதொன்றல்ல. இறைவனால் அனுப்பப்பட்ட நபிமார்களே மக்களின் மனங்களில் நெடுங்காலம் வீற்றிருப்பர். இந்த உயர் தகுதியினை நபிமார்கள் அல்லாத வேறெவருக்கும் இறைவன் வழங்குவதில்லை என்ற கருத்தைத் தெரிவித்துள்ளார்கள்.

ஸ்ரீ கிருஷ்ணர் கோடானு கோடி மக்களின் மனங்களில் நெடுங்காலம் வாழ்ந்து வருபவர். இறைதூதர் அல்லாத ஒருவரால் இத்தகைய இடத்தை நிச்சயமாக பிடிக்க இயலாது. இதன் அடிப்படையிலேயே அஹ்மதி முஸ்லிம்கள் ஸ்ரீ கிருஷ்ணரை ஓர் இறைதூதராக ஏற்கின்றனர்.

## இறை அறிவிப்பு

ஸ்ரீ கிருஷ்ணரை ஓர் இறைதூதராக ஏற்க அஹ்மதி முஸ்லிம்களுக்கு இன்னொரு சிறப்புமிகு சான்றும் உண்டு. அது,

அஹ்மதிய்யா ஜமாஅத்தை நிறுவிய ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள், ஸ்ரீ கிருஷ்ணர் ஓர் இறைதூதர் என இறைவனே தமக்கு அறிவித்துள்ளதாக கூறியிருப்பதாகும். அவர்கள் கூறுவதைப் பாருங்கள்:

‘அறிந்து கொள்ளுங்கள்! இறைவன் எனக்கு அறிவித்தபடி உண்மையில் ராஜா கிருஷ்ணர் ஒரு மாபெரும் மனிதராக விளங்கினார். அவரோடு ஒப்பிடத்தக்க எந்த ஒரு மாபெரும் ரிஷியையோ முனிவரையோ இந்துக்களுள் பார்க்க முடியாது. அவருடைய காலத்தில் அவர் அவதாரமாக அதாவது நபியாக விளங்கினார். இறைவனிடமிருந்து அவருக்கு ‘ரூஹுல் குத்ஸ்’ (பரிசுத்த ஆவி) இறங்கிக் கொண்டிருந்தது. அவர் இறைவன் புறமிருந்து பெரும் வெற்றிக்குரியவராகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டவராகவும் விளங்கினார். அவர் ஆரிய பூமியை பாவங்களிலிருந்து தூய்மைப்படுத்தினார். ஆனால் அக்கால நபியாகிய அவருடைய போதனைகள் பிற்காலத்தில் பல வகையிலும் சீர்குலைக்கப்பட்டன.’ (லெக்சர் ஸியால்கோட் - தமிழில் ஸியால்கோட் சொற்பொழிவு பக்கம் 38, நஷ்ரோ இஷாஅத் காதியான் வெளியீடு - 1990. ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம்: 228)

## ஆன்மீகக் காட்சி

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் இன்னொரு இடத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்கள்:

‘அறிந்து கொள்ளுங்கள்! ஆரிய சமுதாயத்தில் கிருஷ்ணர் என்ற பெயரில் வாழ்ந்து சென்றவர் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவரும் தமது காலத்தின் நபியுமாக இருந்தார் என ஆன்மீகக் காட்சியின் நிலையில் பல முறை இறைவன் எனக்குத் தெரிவித்துள்ளான். மேலும் இந்துக்களிடம் உள்ள ‘அவதாரம்’ என்ற சொல்லும் ‘நபி’ என்ற சொல்லும் ஒரே பொருளைக் கொண்டவையாகும்.’ (துஹ்ஃபாயே கோல்டவியா பக்கம்: 231, ரூஹானி கஸாயின் தொகுதி 17 பக்கம்: 317 அடிக்குறிப்பு)





## ஸ்ரீ கிருஷ்ணர் இறையறிவிப்பு பெற்றவர்

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள், இந்து முஸ்லிம் ஒற்றுமையை வலியுறுத்தி எழுதிய ‘பைகாமே ஸுல்ஹ்’ என்ற நூலில் இவ்வாறு கூறுகின்றார்கள்: (இந்நூல் அவர்களின் மறைவுக்கு இரு நாட்களுக்கு முன் எழுதப்பட்டது.)

‘...அத்தகைய அவதாரங்களுள் (இறைதூதர்களுள்) ஒருவர்தான் இந்தத் தேசத்தில் - குறிப்பாக வங்காளத்தில் பெரிதும் போற்றப்படும் ஸ்ரீ கிருஷ்ணர். தாம் இறை வெளிப்பாட்டைப் பெறுவதாக அவர் கூறினார். அவரைப் பின்பற்றுவோர் அவரையே கடவுளின் நிலைக்கு உயர்த்தி இருக்கின்றனர். ஆனால் அவரது காலத்தில் அவர் இறைவனின் தூதராகவும் அவதார புருஷராகவும் விளங்கினார் என்பதிலோ இறைவன் தனது வார்த்தையை அருக்கு அருளினான் என்பதிலோ எந்த விதமான சந்தேகமும் இருக்க முடியாது.’

( ‘பைகாமே ஸுல்ஹ்’ பக்கம்11- தமிழில் : சமாதானத் தூது பக்கம் 10 அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், சென்னை வெளியீடு- 2002)

## ஸ்ரீ கிருஷ்ணர் பற்றிய தவறான கருத்துக்கள்

ஸ்ரீ கிருஷ்ணர் உண்மையில் ஓர் இறைதூதர்; அப்பழுக்கற்ற ஓர் ஆன்மீகச் செம்மல் என்பதை மேலே கண்டோம். எனினும் இறைதூதர்கள் அவதூறுகளுக்கும் குற்றச்சாட்டுகளுக்கும் இலக்காகுவர்; பிற்காலத்தில் அவர்களைப் பற்றிய கட்டுக்கதைகள் கூறப்படும் என்ற பொது விதிக்கேற்ப ஸ்ரீ கிருஷ்ணர் பற்றியும் தவறான கருத்துகள் நிலவுகின்றன. அதாவது ஸ்ரீ கிருஷ்ணர் என்பவர் ஒரு கற்பனை கதாபாத்திரம் ஆவார்; அவ்வாறு ஒருவர் வாழ்ந்ததே இல்லை என்றும், அவர் ஒரு தீய நடத்தையுடையவர் என்றும் அவரைப்பற்றி மூன்று வகையான கருத்துகள் உள்ளன.

## ஸ்ரீ கிருஷ்ணர் ஒரு வரலாற்று மனிதர்

ஸ்ரீ கிருஷ்ணர் என்ற ஒருவர் வாழ்ந்ததே இல்லை என்றும் வியாச முனிவர் படைத்த ‘மகாபாரதம்’ என்ற காவியத்தில் ஒரு கற்பனைப் பாத்திரம் மட்டுமே ஆவார் என்றும் கருதக் கூடியவர்கள் சிலர் உள்ளனர். கிருஷ்ணரும் கிறிஸ்துவும் கற்பனையே எனப் பிரசாரம் செய்து வருவோரும் உள்ளனர். ஆனால் கிறிஸ்து என்ற ஒருவர் வாழவே இல்லை என்ற வாதம் அடிப்படையற்றதாக இருப்பதைப் போன்றே கிருஷ்ணர் ஒரு கற்பனைப் பாத்திரமே என்போரின் வாதமும் அடிப்படையற்றதாக உள்ளது. ஸ்ரீ கிருஷ்ணர் ஒரு வரலாற்று மனிதர் என எத்தனையோ அறிஞர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். சிசிர் குமார் மித்ரா என்பவர் எழுதியுள்ள ‘விஷன் ஆஃப் இந்தியா’ என்ற நூலில் கிருஷ்ணர் அவர்கள் ஒரு வரலாற்று மனிதர் ஆவார்கள் என்று ஆதாரத்துடன் தெளிவுபடுத்தியுள்ளார்.

அது மட்டுமின்றி வெறும் கற்பனைப் பாத்திரமாக இருந்தவர் கிருஷ்ணர் என்றால் கோடிக்கணக்கான மக்களின் உள்ளங்களில் அவரால் இந்த அளவு மதிப்பு பெற்றிருக்க முடியாது. வேறு எந்த கற்பனைப் பாத்திரமாவது ஸ்ரீ கிருஷ்ணரைப் போல் மக்களின் மதிப்பைப் பெற்று, சொல்லிலும் செயலிலும் பின்பற்றப்படவும் செய்துள்ளதா? கோடிக்கணக்கான மக்கள் தலைமுறை தலைமுறையாக ஸ்ரீ கிருஷ்ணர் அவர்களை மதிப்புடன் நினைவு கூர்ந்து வருகின்றனர். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அந்த ஆன்மீக ஆதரவு இருந்து வந்துள்ளது. இப்படிப்பட்ட மதிப்பையும் ஏற்புடைமையையும் எந்தக் கற்பனை பாத்திரத்தாலோ, பொய்வாதியாலோ பெற முடியாது.

இந்துக்கள் தலைமுறை தலைமுறையாக ஜென்மாஷ்டமியும், கிருஷ்ண ஜெயந்தியும் கொண்டாடி வருகின்றனர். இந்தியா முழுவதிலும் ஸ்ரீ கிருஷ்ணரின்





போதனைகளும், அறிவுரைகளும் நினைவு கூரப்படுகின்றன. ஸ்ரீ கிருஷ்ணரின் போதனைகளும் அறிவுரைகளும் சீர்திருத்தத்திற்கு ஏற்றவையாக இருந்து வருகின்றன.

## ‘கடவுள் அவதாரம்’

ஸ்ரீ கிருஷ்ணர் ஒரு கடவுள் அவதாரமாவார் என்பதும் இந்துக்கள் அவரைக் கடவுளாக வணங்கி வருகிறார்கள் என்பதும் அவர் நபியாக முடியாது என்பதற்குப் போதுமான சான்றாகாது. கடவுள் அவதாரம் என்பதற்கு உண்மையில் ‘நபி’ (தூதர்) என்ற பொருள் தான் உள்ளது. தூதர்கள் மூலமாக கடவுளின் முகம் தென்படுவதாலும் தூதர்களில் இறைவனால் வழங்கப்பட்ட ஆன்மீகப் பண்புகள் காணப்படுவதாலும் அவர்கள் இறை அவதாரங்கள் என அழைக்கப்படுகின்றனர். இதைத் தவிர இறைவன் மனித உருவத்தில் தோற்றமெடுக்கிறான் என்பது பொருள் அல்ல. ஸ்ரீ கிருஷ்ணரை இந்துக்கள் கடவுள் என்ற முறையில் வணங்குகின்றனர் என்பது உண்மையே! ஆனால் அவர் அவ்வாறு போதித்ததுமில்லை; போதித்ததாகக் கருதவும் முடியாது. கிறிஸ்தவர்கள் இயேசுவை கடவுளாக வணங்குவது போன்றதே இதுவும். உண்மையில் கிருஷ்ணரும் இயேசுவைப் போன்ற ஓர் இறையடியாராகவே இருந்தார்.

முஸ்லிம்கள் இன்றும் சில ‘வலி’ மார்களுக்கு (இறை நேசர்களுக்கு) இறை ஆற்றல் இருப்பதாகக் கருதி அவர்களை வணங்குகின்றனர். அவர்களிடம் வேண்டுதலும் செய்கின்றனர். உண்மையில் அந்த ஆன்மீகத் தலைவர்கள் அவ்வாறு போதிக்கவில்லை. முற்காலங்களிலும் மக்கள் ஆன்மீக தலைவர்களை கடவுளாக வணங்கவும், அவர்களின் உருவங்களை சிலைகளாக வடித்து அவற்றை கடவுளின் உருவமாகக் கருதி வணங்கவும் செய்தனர். ஆனால் அந்த

இறையடியார்கள் இப்படிப்பட்ட மனப்பான்மைகளுக்கு மாற்றமாகவே போதித்தும் அறிவுறுத்தியும் வந்துள்ளனர்.

சுருக்கமாக, ஸ்ரீ கிருஷ்ணர் அவர்கள் கடவுளாக வணங்கப்பட்டு வருவதால் அவர் நபியாக இருக்க முடியாது என்ற வாதத்திற்கு எந்தப் பொருளுமில்லை.

## புனித ஆன்மீக மனிதர்

ஸ்ரீ கிருஷ்ணர் ஒரு தீய நடத்தையுடையவர்; எனவே அவரை நபியாகக் கொள்ள முடியாது எனச் சிலர் கூறுவர். ஸ்ரீ கிருஷ்ணர் அவர்களுக்கு 16008 மனைவியர்கள் இருந்தனர் என்றும் அவர்களுடன் போதையில் வாழ்ந்தவர் என்றும் சிலர் கூறுவர்.

இறைதூதர்களை இப்படிப்பட்ட கட்டுக்கதைகளுக்கு இலக்காக்கி இழிவுபடுத்துவது உலக வழக்கு என்பதே உண்மை. சில இறை தூதர்களைப் பற்றி இழிவான செய்திகள் சில மார்க்க நூல்களிலே காணலாம். இறைதூதராகிய லோத்து (லூத் நபி) பற்றி அவர் குடி போதையில் தமது மகள்களிடம் உறவு கொண்டதாக பைபிள் கூறுகிறது. (ஆதியாகமம் 19:31-36)

உண்மையில் இவையெல்லாம் பிற்காலத்தைய மக்கள் அவர்கள் மேல் சாற்றியுள்ள பழிகளாகும். கோணலான உள்ளமுடைய மக்கள் தங்களின் குற்றச்செயல்களை நியாயப்படுத்த அந்தப் பெரியார்கள் மேல் கூறும் பழியே இவை. பிற்காலத்தில் அவை மார்க்க நூல்களிலும் இடம் பெற்றுவிட்டன. இத்தகு குறைபாட்டிலிருந்து பாதுகாக்கப் பட்டிருக்கும் ஒரே மறைநூல் திருக்குர்ஆன் ஆகும்.

ஸ்ரீ கிருஷ்ணர் எவ்வளவு உயர்வான ஆன்மீக போதனைகளை உலகிற்கு வழங்கியுள்ளார் என்பதை பகவத் கீதையை படித்தால் உணரலாம். ஸ்ரீ கிருஷ்ணர் கட்டுப்பாடற்ற





வாழ்க்கை நடத்தியவர் அல்லர். மாறாக, அவர் காலத்தில் களங்கமற்ற தூய வாழ்க்கைக்கு அவரே முன்மாதிரியாகத் திகழ்ந்தார். ஸ்ரீ கிருஷ்ணர் அவர்களுக்கு 16008 மனைவியர்கள் இருந்ததில்லை. மாறாக அவருக்கு 8 மனைவியர்களே இருந்துள்ளனர். அவர்கள் ருக்மணி, ஸத்தியா, ஜாம்பவதி, சத்தியபாமா, காளிந்தி, இலக்ஷ்ணா, மித்ராபிந்தா மற்றும் பத்ரா என்பவர் ஆவர் என பாகவத காண்டம் 10 அத்தியாயம் 61-ல் காணலாம்.

பலதார மணம் உயர்தர ஆன்மீக வாழ்க்கையின் ஓர் அம்சமாக அன்று கருதப்பட்டது. சென்ற கால ஆன்மீக மனிதர்கள் எல்லாம் பலதார மணத்தை ஆதரித்ததை காணலாம். ஸ்ரீ கிருஷ்ணருக்கு 8 மனைவியர்களும் 16,000 சீடர்களும் இருந்தனர். அவர் அந்தச் சீடர்களை மனைவியர்களைப் போலவே நேசித்தும், பாதுகாத்தும் உதவியும் வந்தார்.

ஸ்ரீகிருஷ்ணர் கோபியர்களுடன் காம லீலைகளில் ஈடுபட்டிருந்ததாகக் கருத கூடிய கதைகளும், படங்களும் 'கீதா கோவந்த'த்தில் காணலாம். புராதான காலத்தில் ஓவியங்களும் கல்வெட்டுகளும்தான் வரலாற்று நிகழ்ச்சிகளை பதிவு செய்யப் பயன்பட்டு வந்தன. இவை தவிர வரலாற்று செய்திகளை கதை வடிவிலும் கூறி வந்தனர். இந்தியாவின் தொன்மையான வரலாறுகள் நமக்கு ஐதீகங்கள் மூலமாகவும், ஓவியங்கள் மூலமாகவும், கல்வெட்டுகள் மூலமாகவும் கிடைத்துள்ளன.

ஸ்ரீ கிருஷ்ணர் சிறுவயதில் வெண்ணெய் திருடியதாக ஒரு கதை கூறப்படுவதுண்டு. திருடுவதும், பொய்யுரைப்பதும் ஓர் இறைதூதர் செய்யும் செயலல்ல. இறை தூதர்கள் சிறு வயதிலிருந்தே உண்மையாளராக இருப்பர். அவர்கள் தமது முந்தைய வாழ்க்கையை அதாவது தம்மை இறைதூதராகப் பிரகடனப்படுத்துவதற்கு முன் தாம் வாழ்ந்த தூய வாழ்க்கையை தமது உண்மைக்கு ஆதாரமாகக் காட்டுவர். எனவே ஸ்ரீ கிருஷ்ணர் சிறுவயதில் வெண்ணை திருடினார் என்ற

கதையை நம்மால் நம்ப முடியாது. உண்மையில் ஆன்மீக பார்வையில், பால் இறைஞானத்தை குறிக்கும். வெண்ணை என்பது ஆன்மீகப் பிறப்பின் உயிராகும். இறைஞானத்தை ஸ்ரீ கிருஷ்ணர் சிறுவயதிலேயே இரகசியமாக பெற்றுக் கொண்டார் என்றே இதற்குப் பொருள் கொள்ள வேண்டும்.

அவ்வாறே அவர் வரலாறு குறித்து பதிவு செய்யப்பட்டுள்ள ஓவியங்களுள் ஒரு காட்சியில், சில பெண்கள் நிர்வாணமாக ஒரு குளத்தில் குளித்துக் கொண்டிருக்கின்றனர்; அந்த குளத்தின் அருகில் ஒரு மரத்தின் மேல் ஸ்ரீ கிருஷ்ணர் அந்தப் பெண்களின் ஆடைகளை வைத்துக் கொண்டிருக்கிறார்; அந்தப் பெண்களை பார்த்தவாறு அவர் தன் கையில் உள்ள புல்லாங்குழலை ஊதுகிறார். பெண்களோ தங்கள் ஆடைகளை அவரிடம் கேட்டவாறு இருக்கின்றனர். ஒரு சாதாரான மனிதன் கூட செய்யத் தயங்கும் இச்செயல் ஓர் இறைதூதருக்கு எவ்வாறு பொருந்தும் என சிலர் கேட்கின்றனர். இந்த ஆட்சேபனைக்குக் காரணம் ஒரு தப்பெண்ணமாகும். உண்மையில் இது ஒரு சூழ்நிலை பற்றி படமொழி வாயிலான விளக்கமாகும். இதன் பின்னணியிலுள்ள தத்துவத்தை உணராத இந்துக்கள் கூட இந்த நிகழ்ச்சியை தவிர்த்துக் கொள்கின்றனர். இங்கு பெண்கள் என்பது உலக இச்சையை கொண்ட மக்களை குறிக்கிறது. ஏனெனில் உலகப் பொருள்களை மட்டும் தேடுபவர்களை பெண்களோடும் ஒப்பிட்டுக் கூறப்படுவதுண்டு. எனவே இந்தக் காட்சி விளக்குவது என்னவென்றால் ஸ்ரீ கிருஷ்ணர் அவர்களின் காலத்தில் மக்கள் உலக இன்பத்தில் மூழ்கியவர்களாகவும் ஆன்மீகமான முறையில் நிர்வாணமாகவும் இருந்தனர் என்பதாகும். அதாவது இறையச்சமும் பக்தியும் அற்றவராக இருந்தனர். இறையச்சத்தை ஒரு ஆடை எனத் திருக்குர்ஆன் கூறுகிறது:

'இறையச்சம் என்னும் ஆடையே சிறந்தது' (7:27)





ஸ்ரீ கிருஷ்ணர் தமது மக்களுக்கு இறையச்சத்தின் ஆடையினை வழங்க வந்தவர். ஸ்ரீ கிருஷ்ணர் பெண்களிடமிருந்து ஆடையினை கழற்றி எடுத்துப் பின்னர் மரத்தின் மேல் ஏறியதாக அந்தக் காட்சி கூறவில்லை. மாறாக, அவர் ஆன்மீகமான முறையில் நிர்வாணமாக இருந்தவர்களுக்கு இறையச்சத்தின் ஆடையை அணிவிக்க வந்தவர் என்ற கருத்தே அதில் கூறப்படுகிறது.

மரம் என்பது திருக்குர்ஆன் குறிப்பிடும் 'கலிமதன் தய்யிபதன்' என்பதாகும். அதாவது சிறந்த சொல் ஆகும். திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது:

"தூய்மையான வாக்கு பற்றிய உண்மை நிலையை அல்லாஹ் எவ்வாறு விளக்கியுள்ளான் என்பதனை நீர் காணவில்லையா? அது தூய்மையான ஒரு மரத்தைப் போன்றது. அதன் வேர் உறுதியாக நிலைபெற்றுள்ளது. அதன் கிளை வானத்தை எட்டியுள்ளது". (14:25)

எனவே மரம் என்பது ஆன்மீக இயக்கத்தைக் குறிக்கிறது. ஸ்ரீ கிருஷ்ணர் மரத்தில் அமர்ந்திருப்பது போன்ற சித்திரம் அவர் ஓர் ஆன்மீக இயக்கத்தின் தோற்றுநர் என்றே பொருள்படும்.

அதைப் போன்று புல்லாங்குழல் என்பது உருவகமாகக் கூறப்பட்ட ஒன்றேயாகும். புல்லாங்குழல் சுயமாக எந்த ஒலியையும் எழுப்புவதில்லை. அதனை ஊதுகின்றவரின் எண்ணத்திற்கேற்பவே அதிலிருந்து நாதம் பிறக்கிறது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி,

'அவர் தம் விருப்பப்படி எதுவும் பேசவில்லை; அவர் பேசுவதெல்லாம் அல்லாஹ் அனுப்பியுள்ள புனித வஹியாகும்' (53:4,5) என்று திருக்குர்ஆனில் காணப்படுகிறது.

உண்மையில் இறைதூதர்கள் தமது சொந்தக் கருத்துகளைக் கூறுவதில்லை; மாறாக இறைவன் புறமிருந்து கிடைக்கப்பெற்ற செய்திகளையே மக்களுக்குக்

கூறுகின்றார்கள். புல்லாங்குழலின் தன்மையும் இதுவே. எனவே புல்லாங்குழல் என்றிருப்பதை இறைதூதராகவும் அதிலிருந்து எழும் நாதத்தை இறை வசனமாகவும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

சுருக்கமாகக் கூறுவதென்றால், ஸ்ரீ கிருஷ்ணர் பற்றி உருவகமாகக் கூறப்பட்டவற்றை அல்லது சித்திர மொழியில் இருப்பவற்றை அப்படியே அர்த்தம் செய்த காரணத்தாலும் அவரை எதிர்த்தவர்கள் புனைந்த கட்டுக்கதையின் காரணத்தாலும் ஸ்ரீ கிருஷ்ணரைப் பற்றிய தவறான கருத்துக்கள் உருவாகியுள்ளன என்பதே உண்மை. இது தொடர்பாக அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் நிறுவுனர் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் கூறியிருப்பதைப் பாருங்கள்:

'அந்தோ! தீயவர்கள், தாவூத் நபி மீது கட்டுப்பாடற்றவர், மோசமானவர் என அவதூறு சுமத்தியது போலவே கிருஷ்ணர் மீதும் அது போன்ற அவதூறுகளைச் சுமத்தினர். தாவூத் இறைவனின் போராளியும் வீரமிக்கவரும் இறைநேசம் பெற்றவராகவும் திகழ்ந்ததைப் போன்றே ஆரிய மக்களுள் கிருஷ்ணர் விளங்கினார். எனவே ஆரியர்களின் 'தாவூத்' ஸ்ரீ கிருஷ்ணர் என்றும் இஸ்ரவேலர்களின் 'கிருஷ்ணர்' தாவூத் நபி என்றும் நாம் கூறினால் அது முற்றிலும் உண்மையேயாகும்.' (பராஹீனே அஹ்மதிய்யா தொகுதி 5, பக்கம் 117)

எனவே ஸ்ரீ கிருஷ்ணர், அவர் மீது கூறப்படும் அவதூறுகளுக்கு அப்பாற்பட்ட, களங்கமற்ற ஓர் இறைதூதர் ஆவார்.

## இறைவுணர்வும் ஓரிறை கொள்கையும்

மதங்களின் அச்சாணி இறைவுணர்வாகும். இறைவனைப் பற்றி மக்களுக்குத் தெரிவிப்பதும் அவனை வணங்கவும் அவனது கட்டளைகளுக்கேற்ப வாழவும் அவர்களைப் பழக்குவதுமே இறைதூதர்களின் பணியாகும். இறைதூதரான





ஸ்ரீ கிருஷ்ணர் இதையே செய்துள்ளார் என்பதை பகவத் கீதையை கருத்தூன்றிப் படிக்கின்ற ஒருவரால் புரிந்து கொள்ள இயலும்.

**இறைவனைப் பற்றி ஸ்ரீ கிருஷ்ணர் கூறுவதைப் பாருங்கள்:**

கதிர்பர்தா ப்ரபு: ஸாக்ஷீ நிவாஸ: சரணம் ஸுஹ்ருத்! ப்ரபவ: ப்ரளய: ஸ்தானம் நிதானம் பீஜமவ்யயம்!!

'புகலிடம், வளர்ப்பவன், உடையவன், சாக்ஷி, இருப்பிடம், அடைக்கலம், தோழன், பிறப்பிடம், ஒடுங்குமிடம், தங்குமிடம், களஞ்சியம், அழியாத வித்து.' (பகவத் கீதை 9:18)

இறைவனைப் பற்றிய இதே கருத்துகள் திருக்குர்ஆனிலும் இடம் பெற்றிருப்பதைப் பாருங்கள்:

'எல்லாம் உமது இறைவனிடமே முடிவடைகிறது.' (53:43)

'(இறைவனே) முழு உலகையும் படைத்துக் காத்தோம்புகின்றவனாவான்.' (1:2)

'வானங்கள் பூமி ஆகியவற்றின் ஆட்சி அவனுக்கே உரியதாகும். அல்லாஹ் எல்லாவற்றிற்கும் சாட்சியாவான்.' (85:10)

'அல்லாஹ்வைத் தவிர வேறு எங்கும் அடைக்கலமில்லை.' (9:118)

'அல்லாஹ் நம்பிக்கையாளர்களின் நண்பனாவான்' (2:268)

'அவன் முதலானவனும், இறுதியானவனும், தெளிவானவனும் மறைவானவனுமாவான். மேலும் அவன் எல்லாவற்றையும் நன்கறிந்தவனுமாவான்.' (57:4)

'அவன் என்றென்றும் உயிருடன் இருப்பவன். தானாகவே நிலைத்திருப்பவன். மற்றெல்லாவற்றையும் நிலைக்கச் செய்பவன்.' (2:256)

உலகில் தோன்றிய எல்லா இறைதூதர்களும் ஓரிறை கொள்கையையே வலியுறுத்தினார்கள். ஒரே இறைவனை வணங்க வேண்டும்; அவனுக்கு எதையும் இணைவைக்கக் கூடாது என்பதே அவர்களின் போதனையாக இருந்தது. ஸ்ரீ கிருஷ்ணரும் இதையே போதித்தார் என்பதற்கு பகவத் கீதையிலுள்ள இந்த சுலோகங்களே சான்று:

ஸலம் பச்யன் ஹி ஸர்வத்ர ஸமவஸ்திததமீச்வரம்!
ந ஹிநஸ்த்யாத்மனாத்மானம் ததோ யாதி பராம் கதிம்!!

'எங்கும் ஒப்ப நிலைத்திருக்கும் **ஈசனைக்** காண்போன் தன்னைத்தானே அழித்துக் கொள்கிறானில்லை. அதனால் அவன் பரகதியடைகிறான்.'(அத்தியாயம் 13 சுலோகம் 28)

யதா ப்ரகாசயத்யேக: க்ருத்ஸ்னம் லோகமிமம் ரவி:!
க்ஷேத்ரம் க்ஷேத்ரீ ததா க்ருத்ஸ்னம் ப்ரகாசயதி பாரத!!

'ஒரே சூரியன் எப்படி உலகனைத்தையும் ஒளியுறச் செய்கின்றதோ, அப்படி அர்ஜுனா. பிரபஞ்சமனைத்தையும் **பரமாத்மா** பிரகாசிப்பிக்கிறான்.' (அத்தியாயம் 13 சுலோகம் 33)

யத: ப்ரவ்ருத்திர்பூதானாம் யேன ஸர்வமிதம் ததம்! ஸவகர்மணா தமப்யர்ச்ய ஸித்திம் விந்ததி மானவ:!!

'யாரிடத்திருந்து உயிர்கள் உற்பத்தியாயினவோ, யாரால் இவ்வையகமெல்லாம் வியாபிக்கப்பட்டுள்ளதோ **அந்த ஈசுவரனை** சுயகர்மத்தால் வணங்கி மனிதன் மேன்மையெய்துகிறான்.' (அத்தியாயம் 18 சுலோகம் 46)

தமேவ சரணம் கச்ச ஸர்வபாவேன பாரத!
தத் ப்ரஸாதாத்பராம் சாந்திம் ஸ்தானம் ப்ராப்ஸ்யஸி சாச்வதம்!!

'அர்ஜுனா, எல்லாப் பாங்கிலும் **அவனையே** (அந்த ஏக இறைவனையே) தஞ்சமடை. அவனருளால் மேலாம் சாந்தியும் நிலைத்துள்ள வீடுபேறும் பெறுவாய்.' (அத்தியாயம் 18 சுலோகம் 62)





இவையெல்லாம் ஸ்ரீ கிருஷ்ணர் ஓர் இறைதூதர் என்பதை உறுதி செய்கின்றன.

## ஸ்ரீ கிருஷ்ணரும் இறைதூதர்களின் வருகையும்

ஸ்ரீ கிருஷ்ணர் என்று சொல்லும் போதெல்லாம் பிரபலமான அவருடைய சுலோகமொன்று நம் நினைவுக்கு வரும். அது இது தான் :

यदा यदा हि धर्मस्य ग्लानिर्भवति भारत ।
अभ्युत्थानमधर्मस्य तदात्मानं सृजाम्यहम् ॥ ७

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम् ।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥ ८

யதா யதா ஹி தர்மஸ்ய க்லானிர்பவதி பாரத!

அப்யுக்தான மதர்மஸ்ய ததாக்மானம் ஸ்ருஜாம்யஹம்!

பரித்ராணாய ஸாதூனாம் வினாசாய துஷ்க் ருதாம்!

தர்மஸம்ஸ்தாபனார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே!

பாரதா! எப்பொழுதெல்லாம் அறம் அழிந்து போய் மறம் மேலெழுகிறதோ, அப்பொழுதெல்லாம் என்னை நான் பிறப்பித்துக் கொள்கிறேன்.

நல்லாரைக் காப்பதற்கும், கெட்டவரைக் கரந்தொடுக்குதற்கும், தர்மத்தை நிலைநாட்டுதற்கும் யுகந்தோறும் நான் அவதரிக்கிறேன்.

(ஸ்ரீமத் பகவத் கீதை அத்தியாயம் 4, சுலோகம் 7,8 ஸ்ரீ ராம கிருஷ்ண தபோவனம் வெளியீடு - 1989)

இதில் தர்மம் மறைந்து அதர்மமும் அநியாயமும் பரவும் காலங்களில், தாம் அவதாரமெடுப்பதாக ஸ்ரீ கிருஷ்ணர் கூறுகிறார். ஆனால் ஸ்ரீ கிருஷ்ணர் தோன்றி பல ஆயிரம் ஆண்டுகள் கழிந்துவிட்டன. இந்தக் காலகட்டங்களில் தர்மம் அழிந்து அதர்மம் மேலோங்கியிருந்த நாட்கள் இருந்தன. எனினும் ஸ்ரீ கிருஷ்ணர் வரவில்லை. எனவே மக்களிடையே தர்மம் மறைந்து தீய நடத்தைகள் தலையெடுக்கும் போதெல்லாம் அவதார புருஷர்கள் - இறைதூதர்கள் - நபிமார்கள் தோன்றுவார்கள் என்றே இந்தச் சுலோகத்திற்கு பொருள் கொள்ள வேண்டும்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேசத்திலும் இதே கருத்து கூறப்படுகிறது. அதில் காணப்படுவதைப் பாருங்கள்:

‘அவதார புருஷர் ஈசுவரனால் அனுப்பப்படும் மனுஷ்ய தூதர் ஆவர். அவர் ஒரு பெரிய சக்ரவர்த்தியின் பிரதிநிதி போன்றவர். நெடுந்தூரத்துக்கு அப்பாலுள்ள பிரதேசத்தில் கலகம் நிகழும் போது அதை அடக்குவதற்கு அரசன் தனது பிரதிநிதியை அனுப்புவது போல் உலகில் எங்கேயாவது தர்மம் மலினமடையும் போது அங்கு **தர்மத்தைப் பாதுகாத்து அபிவிருத்திக்குக் கொண்டு வருவதற்காக ஈசுவரன் தமது அவதார புருஷனை அனுப்புகிறார்.**’ (பகவத் கீதை - சுவாமி சித்பவானந்தர் வியாக்கியானம் - பக்கம் 242)

திருக்குர்ஆன், பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு சமுதாயங்களிடையே இறைதூதர்கள் தோன்றியதை பட்டியலிட்டுக் கூறுகிறது. ஹஸ்ரத் இப்ராஹீம், ஹஸ்ரத் இஸ்மாயீல், ஹஸ்ரத் இஸ்ஹாக், ஹஸ்ரத் யாகூப், ஹஸ்ரத் சுலைமான், ஹஸ்ரத் மூஸா, ஹஸ்ரத் தாவூத், ஹஸ்ரத் ஈஸா (அலைஹிமுஸ்ஸலாம்) ஆகியோர் இறைதூதர்களாகத் தோன்றியுள்ளனர். இவர்கள் பற்றி பைபிளிலும் காணப்படுகிறது. இன்னும், ஏற்கனவே குறிப்பிட்டபடி, திருக்குர்ஆனில் பெயர் கூறப்படாத இறைதூதர்களும் உள்ளனர்.





கன்ஃபூஸியர், ஜொரஸ்தர், சாக்ரடிஸ், புத்தர் (அலைஹிமுஸ்ஸலாம்) ஆகியோரும் மக்களுக்கு நேர்வழி காட்ட இறைவனால் அனுப்பப்பட்ட தூதர்களே ஆவர். இப்படி ஸ்ரீ கிருஷ்ணர் கூறியபடி தர்மத்தை நிலைநாட்டும் அவதாரங்களாக இறை தூதர்கள் உலகெங்கும் தோன்றிக் கொண்டிருந்தனர்.

இவற்றுக்கு மகுடம் வைத்தாற்போல் அரேபிய பாலைவனத்தில் அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தோன்றினார்கள். இவர்கள் தோன்றிய காலம் குறித்து திருக்குர்ஆன் ‘கரையும் கடலும் குழப்பத்திலிருந்தன’ எனக் குறிப்பிடுகின்றது. (32:42) அந்த அளவுக்கு உலகெங்கும் அநீதியும் அக்கிரமங்களும் பரவியிருந்தன. இந்த நிலையினை மாற்றுவதற்கு திருக்குர்ஆன் கூறுவது போன்று, ‘அகில உலகுக்கும் ஓர் அருட்கொடையாக’ நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தோன்றினார்கள்.

ஸ்ரீ கிருஷ்ணரைப் பற்றி நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியிருப்பதைப் போன்று நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பற்றி புராணத்தில் கூறப்பட்டிருக்கிறது. மகரிஷி வியாச முனிவரால் எழுதப்பட்ட பதினெட்டு புராணங்களில் ஒன்றான பவிஷ்ய புராணத்தில் இவ்வாறு காண்கிறோம்:

ஏதஸ் மின்னந்தரே மிலேச்ச

ஆச்சார்யண ஸமன்வித

**மஹாமத்** இதிக்கியாத

சிஷ்ய சாகா ஸமன்வித

நிரூபஷ்சேவ மஹாதேவ

மருஸ்தல நிவாஸினம்

ஓர் அன்னிய நாட்டில் ஓர் ஆன்மீகச் சீர்திருத்தவாதி தனது சீடர்களுடன் வருவார். அவர் பெயர் **மஹாமத்**. அவர் பாலைவனத்தைச் சார்ந்தவராக இருப்பார்.(பாகம் 3, சூத்திரம்5, சுலோகம் 3)

லிங்கச் சேதி சிகாஹீன

சுமச்சுறு தாரி ஸதூஷக

உச்சாலாபி ஸர்வ பஷீ

பவிஷ்யதி ஜனோமம

முஸலை நைஸ்மஸ்கார

அவர்கள் விருத்தசேதனம் செய்வார்கள். தலையில் குடுமி இருக்காது. தாடி வைத்திருப்பார்கள். சப்தம் போட்டு அழைப்பார்கள். முஸலை என அறியப்படுவார்கள். (பாகம் 3, சூத்திரம் 3, சுலோகம் 25)

முஹம்மது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களைப் பற்றி மட்டுமல்லாது அவர்களை ஏற்ற முஸ்லிம் (முஸலை) பற்றியும் கூட இந்தப் புராணத்தில் முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது. அவதாரங்களாக இறைதூதர்கள் வருவது பற்றிய ஸ்ரீ கிருஷ்ணரின் கருத்து அவரை ஓர் இறைதூதராக நமக்கு அடையாளம் காட்டுகிறது.

இந்தியாவில் தோன்றிய அவதாரங்களில் தலைசிறந்தவராக ஸ்ரீ கிருஷ்ணர் விளங்குவது போன்று உலகெங்கும் தோன்றிய இறைதூதர்களுள் தலைசிறந்தவராக ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் விளங்குகின்றார்கள். அதுமட்டுமல்ல இன, நிற, மொழி, நாடு ஆகிய பேதங்கள் இல்லாமல் முழு மனித குலத்துக்கும் பொதுவான போதனைகளை அவர்கள் அளித்தார்கள்.





இஸ்லாம் மனிதகுல மேம்பாட்டிற்காக இறைவனால் வழங்கப்பட்ட இறுதி மார்க்கமாகும். அதன் மறை நூலான திருக்குர்ஆன் உலகில் தோன்றிய பல்வேறு இறைவேதங்களின் சாராம்சத்தை உள்ளடக்கியதாகும். திருக்குர்ஆனின் பல கருத்துகள் பகவத் கீதையின் கருத்துகளுடன் ஒத்துப்போவதைக் காணும் போது இந்த உண்மையை உணர முடிகிறது.

## ஸ்ரீ கிருஷ்ணரும் புனிதப் போரும்

புத்தர், இயேசு போன்று ஸ்ரீ கிருஷ்ணர் முழுக்க முழுக்க அஹிம்சையை போதிக்கவில்லை. மாறாக அநீதியை எதிர்த்துப் போரிட வேண்டிய அவசியத்தை அவர் உணர்த்தினார். தர்மத்தை நிலை நாட்டுவதற்கும் நல்லவர்களைக் காப்பதற்கும் போர் செய்ய வேண்டி வந்தால் அப்போது அதனை செய்யாமல் இருப்பது பாவம் என்று கூறுமளவுக்கு புனிதப்போரை அவர் வலியுறுத்தினார். அவர் கூறுவதை பாருங்கள்:

स्वधर्ममपि चावेक्ष्य न विकम्पितुमर्हसि ।
धर्म्याद्धि युद्धाच्छ्रेयोऽन्यत् क्षत्रियस्य न विद्यते ॥

ஸ்வத்மமபி சாவேஷ்ய ந விகம்பிது மர்ஹஸி!

தர்ம்யாத்தி யுத்தாச்ரேயோன்யத் ஷத்திரியஸ்ய ந வித்யதே!

ஸ்வதர்மத்தை நோக்குமிடத்தும் நீ மனம் நடுங்கலாகாது. அறப்போரைக் காட்டிலும் வேறு சிறப்பு ஷத்திரியனுக்கு இல்லை. (அத்தியாயம் 2 சுலோகம்31)

अथ चेत्त्वमिमं धर्म्यं संग्रामं न करिष्यसि ।
ततः स्वधर्मं कीर्तिं च हित्वा पापमवाप्स्यसि ॥

அத சேத்த்வமிமம் தர்ம்யம் ஸங்க்ராமம் ந கரிஷ்யஸி!

தத: ஸ்வதர்மம் கீர்த்திம் ச ஹித்வா பாபமவாப்ஸ்யஸி!!

அறப்போர் ஆகிய இதனை ஆற்றாவிட்டால் அதனால் நீ ஸ்வதர்மத்தையும் கீர்த்தியையும் இழந்து பாபத்தை அடைவாய். (அத்தியாயம் 2 சுலோகம் 33)

இவற்றை போன்று புனிதப் போரை வலியுறுத்தும் வசனங்கள் திருக்குர்ஆனில் காணப்படுகின்றன. இவை ஆட்சேபனைக்குரியவையாக இன்று சிலரால் கருதப்படு கின்றன. ஆனால் வாழ்வா சாவா என்ற நிலைக்கு நம்பிக்கையாளர்கள் தள்ளப்படும்போதே ஆயுதமேந்த இஸ்லாம் அனுமதியளிக்கிறது.

இது தொடர்பாக திருக்குர்ஆன் கூறுவதைப் பாருங்கள்:

أُذِنَ لِلَّذِينَ يُقَاتَلُونَ بِأَنَّهُمْ ظُلِمُوا ۚ وَإِنَّ اللَّهَ عَلَىٰ
نَصْرِهِمْ لَقَدِيرٌ
الَّذِينَ أُخْرِجُوا مِنْ دِيَارِهِمْ بِغَيْرِ حَقٍّ إِلَّا أَنْ
يَقُولُوا رَبُّنَا اللَّهُ

‘எவர்கள மீது போா தொடுககபபடடதோ அவர்களுக்குப் (போரிட) அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏனெனில் அவர்கள் மீது அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. மேலும் நிச்சயமாக அல்லாஹ் அவர்களுக்கு உதவ ஆற்றல் உள்ளவனாவான்.

எங்களின் இறைவன் அல்லாஹ் என்று சொன்னதற்காக மட்டும் அநியாயமாக அவர்களின் வீடுகளிலிருந்து விரட்டப்பட்டவர்களுக்கு (போரிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.)’ (22:40, 41)





وَقَاتِلُوا فِي سَبِيلِ اللَّهِ الَّذِينَ يُقَاتِلُونَكُمْ وَلَا
تَعْتَدُوا ۚ إِنَّ اللَّهَ لَا يُحِبُّ الْمُعْتَدِينَ

‘உங்களிடம் போர் செய்வோருடன் நீங்களும் அல்லாஹ்வின் பாதையில் போர் செய்யுங்கள். ஆனால் வரம்பு மீறாதீர்கள். வரம்பு மீறுபவர்களை அல்லாஹ் ஒரு போதும் நேசிப்பதில்லை.’ (2: 191)

وَقَاتِلُوهُمْ حَتَّىٰ لَا تَكُونَ فِتْنَةٌ وَيَكُونَ الدِّينُ لِلَّهِ ۖ
فَإِنِ انْتَهَوْا فَلَا عُدْوَانَ إِلَّا عَلَى الظَّالِمِينَ

கலகம் இல்லாதொழிந்து மார்க்கமென்பது அல்லாஹ்விற்குரியதாகவே ஆகும் வரையிலும் நீங்கள் அவர்களுடன் போர் செய்யுங்கள். பின்னர் அவர்கள் விலகிக்கொண்டால், அநீதியிழைப்பவர்களைத் தவிர வேறெவரின் மீதும் பகைமை பாராட்டாதீர்கள். (2:194)

புனிதப் போர் பற்றி திருக்குர்ஆன் கூறும் அதே கருத்துகளை ஸ்ரீ கிருஷ்ணரும் கூறியிருப்பது அவர் ஓர் இறைதூதர் என்பதற்கு இன்னொரு சான்றாக அமைகிறது.

## சமாதானத் தூதுவர்கள்

தனி மனிதன் அமைதி பெறக்கூடிய வழிவகைகளையும் சமுதாயத்தில் சமாதானம் நிலவுவதற்கான வழிமுறைகளையும் திருக்குர்ஆனும் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களும் கூறியிருப்பதைப் போன்றே கீதையில் ஸ்ரீ கிருஷ்ணர் கூறுகிறார். உண்மையில் இறைதூதர்கள் அனைவருமே சமாதானத்தின் தூதுவர்கள் ஆவார்கள். மக்கள் அனைவரும் ஒரே இறைவனை, எல்லாம் வல்ல

ஏகப்பரம்பொருளை வணங்குகின்றவர்களாக ஒரே இனமாக வாழ்கின்றவர்களாக இருக்கவேண்டும் என்பதே இந்த இறைதூதர்களின் இலக்காக இருந்தது.

எனவே திருக்குர்ஆன் கூறுவதையே நாங்கள் கூறுகிறோம்:

‘நாங்கள் அல்லாஹ்விடத்திலும் எங்களுக்கு இறக்கப்பட்டதிலும் இப்ராஹீம், இஸ்மாயீல், இஸ்ஹாக் ஆகியோர்க்கும் யாகூபுக்கும் (அவருடைய) மக்களுக்கும் இறக்கப்பட்டதிலும் மூஸாவுக்கும் ஈஸாவுக்கும் வழங்கப்பட்டதிலும் இவ்வாறே **எல்லா நபிமார்களுக்கும் அவர்களுடைய இறைவனிடமிருந்து வழங்கப்பட்டதிலும் நம்பிக்கை கொண்டுள்ளோம்.** நாங்கள் அவர்களுள் எவருக்கிடையிலும் வேற்றுமை பாராட்டுவதில்லை. நாங்கள் அவனுக்கே (இறைவனுக்கே) கட்டுப்பட்டவர்களாவோம்.’ (2:137)

*****





# ஸ்ரீ கிருஷ்ணர் அலைஹிஸ்ஸலாம்

### ‘கொச்சின் கார்டியன்’ தலையங்கம்

ஸ்ரீ கிருஷ்ணர் அலைஹிஸ்ஸலாம் எனக் கேள்விப்படுகின்ற போது விஷ்ணு பக்தர்கள் ஆச்சரியமடையலாம். கோபால கிருஷ்ணரை இஸ்லாமியராக்கு வதா? எனச் சந்தேகப்படலாம். பதினாறாயிரத்து எட்டு காதலிகளுடன் குலவுகின்றவர் எனக் கற்பனை செய்தவர்களும், குருச்சேத்திர போர்க்களத்தில் சஞ்சல மனமுடைய அர்ஜுனனுக்குத் துணிவூட்டியவர் என புரிந்து கொண்டவர்களும், உயர்வான தர்ம அறிவுரைகளின் ஊற்று என்று கருதுபவர்களுமான கிருஷ்ண பக்தர்கள் பலவகை! முஸ்லிம்களிடையே ஸ்ரீ கிருஷ்ணரை மதிக்கவும் கண்ணியப்படுத்தவும் செய்கின்ற பக்தர்களின் சமுதாயம் ஒன்று உண்டு என்பது பெரும்பாலாருக்குத் தெரியாத ஒரு விஷயம்.

ஸ்ரீ கிருஷ்ணர் ஒரு கற்பனைக் கதாநாயகன் என வாதிடுகின்ற பகுத்தறிவுவாதிகளுக்கு அவர்கள் அறிவுப்பூர்வ மாக பதிலளிக்கின்றனர். ஸ்ரீ கிருஷ்ணரைக் கடவுள் என்று நம்புவர்களுக்கு உண்மையான கடவுள் யார் என விளக்கிக் கூறுகின்றனர்.

கிருஷ்ணரின் உண்மை நிலை என்னவென்று விளக்க தங்களால் இயலுமென அவர்கள் கூறுகின்றனர். அவர்கள்

அதற்காக முயலவும் செய்கின்றனர். அந்த முயற்சி வெற்றி அடைவதற்கான பிரார்த்தனையாகவே கிருஷ்ணரின் பெயருடன் சேர்த்து ‘அலைஹிஸ்ஸலாம்’ என அவர்கள் கூறுகின்றனர்.

‘‘இறைவன் அவரைக் காப்பானாக; இறைவனின் சாந்தி அவரிடம் இருப்பதாக!’’, என்பன அதன் பொருள்கள். கிருஷ்ணரை வணங்குபவர்கள் அந்த மகாத்மாவை ஏராளமான கட்டுக்கதைகளில் சிக்க வைத்து, நம்பமுடியாத கதாநாயகனாக அவரை ஆக்கியிருப்பதிலிருந்து கிருஷ்ணர் காப்பாற்றப்பட வேண்டும். அப்படி ஒருவர் பிறந்ததே இல்லை; கட்டுக் கதைகள் உருவாக்கியுள்ள பொய்கள்தான் இவை என மறுப்பவர்களிடமிருந்து ஸ்ரீ கிருஷ்ணர் காப்பாற்றப்பட வேண்டும். இறை பாதுகாப்பு அவருக்கு உண்டாவதாக எனப் பிரார்த்திக்கக் கூடிய முஸ்லிம் பிரிவினர் கூறும் நியாயம் இதுவாகும். கிருஷ்ணர் கற்பனைக் கதாநாயகன் அல்லர்; கடவுளும் அல்லர் என்றால் அவர் யார் என்ற கேள்விக்கு அவர்கள் பதிலளிக்கிறார்கள். மனிதனை உண்மையான இறைவனுடன் தொடர்பு ஏற்படுத்துவதற்காக மனிதர்களிலிருந்து சிலர் உயிர்த்தெழுவது வழக்கம். மனித சமுதாயமாகிய பாலைவனத்தில் நூற்றாண்டுகளுக்கிடையே உருவாகும் ஆலமரங்களாவர் அவர்கள்! உலகின் எல்லா பகுதிகளிலிருந்தும் அப்படிப்பட்ட மாமனிதர்கள் பிறந்துள்ளனர். இறைவனிடமிருந்து இறைதூது கிடைக்கப்பெற்ற அந்த மாமனிதர்களை சேர்ந்தவர்களே முஹம்மது நபி, இயேசு, மோசே, தாவூது ஆகியோர். ஸ்ரீ கிருஷ்ணரும் அவர்களைப் போன்று ஒரு மாமனிதர் அல்லது தூதராவார். அரபிமொழியில் இதை நபி என்பர்.

ஸ்ரீ கிருஷ்ணரை நபியென்று கூறும் முஸ்லிம் பிரிவினர், பெரும்பான்மை முஸ்லிம்களின் கருத்துப்படி முஸ்லிம் அல்லாதோர் ஆவர் அல்லது இஸ்லாத்திற்கு அப்பாற்பட்ட காஃபிர் ஆவர். இந்துக்களைப் போலவும், கிறிஸ்தவர்களைப்





போலவும் பெயர் கூறி அறியப்பட வேண்டிய பிற பிரிவினர் ஆவர்.

அவர்களைப் பிற முஸ்லிம்கள் பள்ளிவாசல்களிலிருந்து வெளியேற்றுகின்றனர். அடக்கஸ்தலம் கொடுக்க மறுக்கின்றனர். ஏன் திருமணச்சடங்கு போன்றவற்றுள் அவர்களைக் கண்டால் சடங்கு நடத்திக் கொடுக்காமல் புரோகிதர் இறங்கிப் போய்விடுவார். இஸ்லாமிய ஆட்சி நடைபெறுவதாகக் கூறப்படுகின்ற பாகிஸ்தானில் இந்தப் பிரிவினர் தங்களை முஸ்லிம் எனக் கூறினால் அது மூன்றரை ஆண்டு கடுந்தண்டனை தரக்கூடிய குற்றமாகும் என பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

எல்லா வகை எதிர்ப்புகளையும் புறக்கணித்தவாறு ஆன்மீக அரங்கில் வியப்பளிக்கும் வகையில் இயங்கும் இந்த முஸ்லிம் பிரிவினர் இன்று (1986 ஆம் ஆண்டில்) உலகில் ஒன்றரை கோடிக்கும் மேல் உள்ளனர். எல்லா கண்டங்களிலும் பரவிக் கிடக்கின்ற இந்த மக்கள் கூட்டம் தங்கள் கொள்கை பிரச்சாரங்களுக்கிடையே, இந்தியாவில் தோன்றிய தூதர், மகாத்மா ஸ்ரீ கிருஷ்ணர் அலைஹிஸ்ஸலாம் என்று கூறக் கேட்கலாம். ஸ்ரீ கிருஷ்ணர் ஒரு நபி ஆவார் என்பதற்கு அவர்கள் கூறும் சான்று புனித குர்ஆனே ஆகும். உலகின் எல்லா பகுதிகளிலும் ஓரிறைவனைப் பற்றிப் போதிக்க நபி தோன்றியதாக குர்ஆன் மீண்டும் மீண்டும் கூறுகிறது. அந்த தூதர்களின் எண்ணிக்கை ஒன்றேகால் இலட்சமளவு இருக்குமென முஹம்மது நபி கூறியுள்ளார்கள். அவ்வாறிருக்க பழைய கலாச்சாரத்தின் விளை நிலமான இந்தியாவில் நபிமார்கள் வரவில்லை எனக் கூறுவது குர்ஆனின் போதனைக்கு முரணாகும் என அவர்கள் வாதிடுகின்றனர்.

இந்தியாவில் கருப்பு நிறத்தையுடைய ஒரு நபி தோன்றி இருந்தார் என்றும், ‘காஹின்’ என்பது அவரின் பெயர் என்றும் ஒரு நபிமொழியில் உள்ளது. காஹின் ‘கண்ணன்’ என்பதன்

அரபிசொல் ஆகுமாம். இந்தச் சான்றுகளைக் காட்டி பிற நபிமார்களின் பெயருடன் சொல்ல கூடிய பிரார்த்தனையை ஸ்ரீ கிருஷ்ணரின் பெயரோடும் அவர்கள் கூறுகின்றனர்.

அஹ்மதி முஸ்லிம்கள் என்றழைக்கப்படுகின்ற இந்த மக்கள் கூட்டம், இந்தக் காலத்தில் கிருஷ்ணா அவதாரம் நிகழ்ந்துள்ளது என்றும் வாதிடுகின்றனர். முஸ்லிம்கள் இமாம் மஹ்தி என்றும், கிறிஸ்தவர்கள் 'மஸீஹ்' என்ற பெயரிலும் எதிர்பார்த்திருந்த மாமனிதர் தோன்றிவிட்டார் என்றும்' வட இந்தியாவில் பஞ்சாபைச் சேர்ந்த காதியானில் பிறந்த மிர்ஸா குலாம் அஹ்மது தான் அவர் என்றும் நம்புகின்ற இந்த பிரிவினர் ஹஸ்ரத் அஹ்மது அவர்களுக்கு கிடைத்த இறை அறிவிப்புகளின்படிதான் ஸ்ரீ கிருஷ்ணரை நபி என்று நம்புகின்றனர். அஹ்மதின் தோற்றம் இந்தக் காலத்தின் கிருஷ்ணாவதாரம் என அவர்கள் கருதுகின்றனர்.

கிருஷ்ணரைப் பற்றி மக்களிடையே பரவியுள்ள எல்லாக் கதைகளுக்கும் ஆன்மீக பொருள் உள்ளது எனவும் அவர்கள் விளக்குகின்றனர் . சுருக்கமாக அஹ்மதி முஸ்லிம்கள் விளக்குகின்ற கிருஷ்ணருக்கு தனித்தன்மையும் தனிச்சிறப்புகளும் உள்ளதாக நம்மால் காணமுடிகிறது. (கொச்சின் கார்டியன், கொச்சின் 1986 ஜனவரி 31)

*****